# கரோனா தொற்று தடுப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள்

## ● சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஏற்பாடு

■ சென்னை

கரோனா தொற்று தடுப்பு தொடர்பாக, மெட்ரோ ரயில் நிலையத்தில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், கரோனா தொற்று தடுப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், அகரம் கலைக்குழுவுடன் இணைந்து விமான நிலையம் மெட்ரோ ரயில் நிலையத்தில் நாளை (22-ம் தேதி) இரவு 7 மணி முதல் 7.50 மணி வரையில் கரோனா வைரஸ் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நாடகத்தை நடத்தவுள்ளது.

இதேபோல், வரும் 25-ம் தேதி காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையில் வண்ணாரப்பேட்டை மெட்ரோவிலிருந்து விமான நிலையம் மெட்ரோ (டிஎம்எஸ் வழியாக) மற்றும் விமான நிலையம் மெட்ரோவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ (கோயம்பேடு வழியாக) செல்லும் மெட்ரோ ரயிலில் பொம்மலாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பயணிகள் மற்றும் பொது மக்கள், மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெறும் கரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.